**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், வேடசந்தூர்**
**O.S. 150/2013**
**நாள்.22.03.2024**
**வா.சா.2- கணேசன்**
**பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை**

நிரூபண வாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியும். வாதிகள் என்ன வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்று எனக்கு தெரியும். எவ்வளவு சொத்திற்கு வாதிகள் வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் 10 1/2 ஏக்கருக்கு வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள். தாவா சொத்து யாருக்கு எவ்வாறு பாத்தியப்பட்டது என்பதை எனது தகப்பனார், பாட்டனார் சொல்லி எனக்கு தெரியும். நேரடியாக எனக்கு தெரியாது. கருப்பணசேர்வையும், மாணிக்கம்சேர்வையும் வாய்க்கரலாக 10 1/2 ஏக்கர் பாகம் செய்து கொண்டதாக கூறியுள்ளதற்கு ஆவணம் எதையும் நாங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

கருப்பணசேர்வையின் மகள் தான் 1ம் பிரதிவாதி மருதாயி அம்மாள் என்றால் சரியல்ல. மருதாயி அம்மாள் இறந்து விட்டார். கருப்பணசேர்வை இறந்த போது மருதாயி அம்மாள் குழந்தையாக இருந்த விவரத்தை எனது தகப்பனார் என்னிடம் கூறவில்லை என்றால் கருப்பணசேர்வைக்கு திருமணம் ஆகவில்லை என எனது தகப்பனார் கூறினார். கருப்பணசேர்வைக்கு திருமணமாகி பின்னர் மருதாயி அம்மாள் பிறந்து கருப்பணசேர்வையும் அவரது மனைவியும் இறந்து விட்டதால் மருதாயி அம்மாள் தான் அவர்களுக்கு ஒரே வாரிசு என்றால் சரியல்ல. தாவா சொத்துக்கள் முழுவதும் கருப்பணசேர்வை பேரில் தான் கிரையம் வாங்கப்பட்டது என்றால் கருப்பணசேர்வை மற்றும் மாணிக்கம்சேர்வை இருவரின் பேரிலும் கிரையம் வாங்கப்பட்டது. கருப்பணசேர்வை, மாணிக்கம்சேர்வை உடன்பிறந்தவர் கிடையாது. மாமன், மச்சான் உறவுமுறை. கருப்பணசேர்வை இறந்த பின்னர் அவரது சகோதரர்களுடன் சேர்ந்து சொத்துக்களை 1ம் பிரதிவாதியான மருதாயி அம்மாளும் அனுபவம் செய்து வந்தார் என்றால் சரியல்ல. கருப்பணசேர்வையின் சகோதரர்கள் அனைவரும் சேர்ந்து தான் 1ம் பிரதிவாதி மருதாயி அம்மாளுக்கு திருமணம் செய்து வைத்தார்கள் என்றால் சரியல்ல.

கருப்பண சேர்வைக்கு அவரது சகோதரர்கள் சுப்பிரமணியசேர்வை,

காளியப்பன்சேர்வை, துரைச்சாமிசேர்வை, கருப்பையாசேர்வை ஆகியோர் மட்டுமே அவரது வாரிசுகள் ஆவர். நான் சுப்பிரமணியசேர்வையின் 4 வது மகனான கருப்பையாசேர்வையின் மகனாவேன்.

நான் 05.01.1981 ம் தேதியில் பிறந்தேன். கருப்பணசேர்வை 10.06.1945 ம் தேதியில் இறந்தார் என்றாலும், நான் 16.05.1951 ம் தேதியில் கருப்பணசேர்வை இறந்துவிட்டதாக பொய்யாக கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. வேறு ஒரு கருப்பணசேர்வையின் இறப்பு சான்றை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. 1 ம் பிரதிவாதி திருமணமாகி வாழ்ந்து வந்த சமயத்தில் சொத்துக்களில் பாகம் கேட்டதால் அவரது உரிமையை மறுக்க வேண்டும் என்பதற்காக பொய்யாக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்று சொன்னால் சரியல்ல. கருப்பணசேர்வையின் சகோதரர்கள் சொத்துக்களை அபகரிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் 1 ம் பிரதிவாதிக்கு சொத்துக்களை கொடுக்காமல் இருந்து வருகிறோம் என்றால் சரியல்ல. தாவா சொத்துக்களில் 1 ம் பிரதிவாதிக்கு தான் முழு உரிமையும் உள்ளது என்றாலும், வாதிகளுக்கு ஆதரவாக நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

தாவா சொத்துக்களின் முழு விவரம் எனக்கு நேரடியாக தெரியாது என்றாலும், எனது தகப்பனார் கூறியதன் பேரில் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. கருப்பணசேர்வையின் வாரிசு 1 ம் பிரதிவாதி என்று மாணிக்கம் சேர்வையின் வாரிசுகளுக்கு தெரியும் என்றாலும், நான் உண்மையை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. கருப்பணசேர்வை இறந்த பின்னர் சுப்பிரமணிசேர்வை பேரில் பட்டா மாற்றம் செய்யப்பட்டது என்றால் சரிதான். கருப்பணசேர்வை இறந்த சமயத்தில் 1 ம் பிரதிவாதி மைனராக இருந்ததால் காப்பாளர் என்ற முறையில் சுப்பிரமணிசேர்வை பேரில் பட்டா மாற்றம் ஏற்பட்டது என்றால் சரியல்ல. மேற்படி பட்டாவை ரத்து செய்ய 1 ம் பிரதிவாதி பழனி கோட்டாட்சியரிடம் மனு செய்த விவரம் எனக்கு தெரியும். தாவா சொத்துக்களுக்கு 1 ம் பிரதிவாதிதான் சட்டப்படியான உரிமையாளர் என்றால் சரியல்ல.

சொத்துக்களை பெண் வாரிசுக்கு தரக் கூடாது என்ற கெட்ட எண்ணத்தில் சொத்துக்களை அபகரித்து அனுபவம் செய்து வருகிறோம் என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்துக்கள் வாதிகளுக்கு பாத்தியப்பட்டதல்ல என்பதால் வாதிகள் கேட்டுள்ள பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என்றாலும், சொத்துக்களை அபகரிக்க வேண்டும் என்ற நோக்கத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் எனது சாட்சியம் ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல. 1ம் பிரதிவாதியின் வாரிசுகள் தாவா சொத்துக்களின் உரிமை கேட்டு வருவார்கள் என்பதற்காக பொய்யான ஆவணங்களை சுப்பிரமணிசேர்வை வாரிசுகள் ஏற்படுத்தியுள்ளார்கள் என்று சொன்னால் சரியல்ல. வாதிகள் வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

*Take down by me in open court and Read over to the witness and interpreted to him/her in Tamil and admitted by him/her to be correct*

Digitally signed by R VANJI NATHAN

**Principal District Munsif**
**Vedasandur**